# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண். 406/2012 உடன் இணைந்த 53/2010

பெயர் : **பச்சமுத்து** நாள் : 12.01.2023

வா.சா.2 – 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.2 – பச்சமுத்து - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.50</u>

அசல் வழக்கை நடேசன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். யார்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், அவருடைய அண்ணன் ராமசாமிமீது தாக்கல் செய்துள்ளார். அவர் தற்போது உயிருடன் இல்லை. நிலத்தில் இருவருக்கும் பாகம் உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் சாட்சியம் அளிக்க இந்த நீதிமன்றத்தில் அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்களை நடேசன் என்பவர்தான் எனக்கு கூறினார். அசல் வழக்கை நடேசன்தான் தாக்கல் செய்துள்ளார். எனக்கும் நடேசனுக்கும் சுமார் 30, 35 வருடங்களாக பழக்கம் உள்ளது. நடேசனும் நானும் ஒன்றாக படித்தோம், அதன் பின் தொழில் சம்பந்தமாக எங்களுக்குள் பழக்கம் உள்ளது. நான் பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் ராமசாமி சொல்லிதான் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நடேசன் ஜம்புலிங்கம் எங்கு வந்த கூறினார் என்றால், எனது வீட்டில் வந்து கூறினார். எப்போது வந்து சொன்னார் என்றால், 10 நாட்களுக்கு முன்னர் வந்து சொன்னார்.

2) ராமசாமி எனது நண்பர் என்பதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். ராமசாமி எனக்கு லாரி தொழில் செய்வதன் மூலம் நண்பராவார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ராமசாமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சி கையொப்பம் செய்தேன். அதே தேதியில் ராமசாமி கிரையம் வாங்கினாரா என்றால், கிரையம் வாங்கினார். கட்டிடத்திற்கு வெளியே ஒரு கையெழுத்தும், கட்டிடத்திற்கு உள்ளே ஒரு கையெழுத்தும் போட்டேன். கிரையத்தின்பொழுது ராமசாமி, நடேசன் ஜம்புலிங்கமும் வந்திருந்தார்களா என்றால், ராமசாமிதான் வந்திருந்தார். அவர் தனது தம்பி நடேசன் ஜம்புலிங்கம் வாங்கும் சொத்திற்கும் கையெழுத்து போடவேண்டும் என்று கூறினார். நான் கையெழுத்து போட்டேன். நான்

சாட்சி கையெழுத்து செய்தபொழுது வெப்படையை சார்ந்த நடேசன் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டார். நான் நடேசன் ஜம்புலிங்கம் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்திற்கு மட்டுந்தான் சாட்சி கையெழுத்து போட்டேன். ராமசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்திற்கு சாட்சி கையொப்பம் போடவில்லை. கட்டிட அலுவலகத்திற்குள் கையெழுத்து போடும்பொழுது வெப்படையை சார்ந்த நடேசனும் கையொப்பம் செய்தார் என்றால், சரிதான். இன்னாரென்று நிரூபிக்கும் சாட்சியாக நானும், நடேசன் என்பவரும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால், சரிதான். நான் கிரையம் பெறுபவர்களை நிரூபிப்பதற்காகத்தான் கையொப்பம் போட்டேன். வாங்குபவர் இருக்கும்பட்சத்தில் மட்டுமே இன்னாரென்று நிரூபித்தவர் என்று கையொப்பம் செய்யமுடியும் என்றால், சரிதான்.

3) நான் 1992ம் ஆண்டில் ராமசாமி மாரிமுத்தான்காட்டில் பார்த்தேன். மாரிமுத்தான் காட்டிற்கும், எங்கள் ஊருக்கும் சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும். நான் ஓட்டுநராகத்தான் இருந்தேன். காரைகிணத்து தோட்டம் எங்குள்ளது என்றால், சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு எதிரில் உள்ளது. ராமசாமி வாங்கிய கிரைய பத்திரத்தையும், நடேசன் ஜம்புலிங்கம் வாங்கிய கிரைய பத்திரத்தையும் நான் படித்துப் பார்த்தேன் என்றால், சரிதான். அந்த இரண்டு ஆவணங்களிலும் சரி பாதி என்றுதான் எழுதப்பட்டுள்ளதா என்றால், 5100 சதுரடி, 5100 சதுரடி என்று எழுதப்பட்டுள்ளது. நான் முதன்மை சாட்சியத்தில் பேர் பாதி என்று கூறியிருந்தால், அது தவறு என்று சொன்னால், இரண்டாக ஆளுக்கு பாதி பிரிந்ததைதான் பேர் பாதி என்று கூறியுள்ளேன். ராமசாமி அழைத்துதான் நான் கிரையம் செய்யும்பொழுது கட்டிட ஆபீஸ்-க்கு சென்றேன். கட்டிட ஆபீஸில் யார் பணம் கொடுத்தார் என்றால், ராமசாமிதான் பணம் கொடுத்தார். அமெரிக்காகாரர் பணத்தை வாங்கிதான் கிரையம் பெறுவதாக கூறினார். நடேசன் ஜம்புலிங்கம் எந்த பணமும் கிரையத்திற்காக கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக நடேசன் ஜம்புலிங்கம் பணம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

4) எனக்கு கிரைய ஆவணங்களைப்பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும், நடேசன் ஜம்புலிங்கம் எழுதி கொடுத்தபடிதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நடேசன் ஜம்புலிங்கம் யார் மூலமாக அமெரிக்காவிலிருந்து பணம் கொடுத்தார் என்றால், அவருடைய நண்பர் மூலமாக கொடுத்தார். அவருடைய நண்பர் பெயர் எனக்கு தெரியாது. நடேசன் ஜம்புலிங்கத்திடம் வரவு செலவு கணக்கு

ஏதேனும் வைத்துள்ளேனா என்றால், இல்லை. பழக்கம் மட்டுந்தான் உள்ளது. நடேசன் ஜம்புலிங்கம் எந்த வகையில் பணம் அனுப்பினார் என்ற விபரம் தெரியுமா என்றால், நடேசன் ஜம்புலிங்கம் பணம் அனுப்பியதாகவும், அதை போய் வாங்கி வந்ததாக ராமசாமி கூறினார். அமெரிக்காவிலிருந்து இந்திய பணமாக கொடுக்கமுடியாது என்றாலும், நான் பொய்யாக அமெரிக்காவிலிருந்து நடேசன் ஜம்புலிங்கம் பணம் அனுப்பியதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நடேசன் ஜம்புலிங்கம் அமெரிக்காவில் இருந்துதான் பணம் கொடுத்தார் என்று திரும்ப திரும்ப சாட்சியம் அளிக்கவேண்டிய அவசியம் என்னவென்றால், ராமசாமி என்னிடம் கூறினார், அதைதான் கூறுகிறேன். பணத்தை 2000 தாளாக, 1000 தாளாக கொடுத்தார்களா என்றால், அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. பணம், கிரையப் பத்திரம், கிரைய செலவு குறித்த விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், ராமசாமி சொல்லிதான் தெரியும் என்றாலும், சரிதான். நான் நடேசன் ஜம்புலிங்கத்தின் நெருங்கிய நண்பர் என்பதால், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நடேசன் ஜம்புலிங்கம் எந்த பணமும் கொடுக்கவில்லையென்றாலும், ராமசாமிதான் பணம் செலுத்தி இரண்டு கிரைய பத்திரங்களை பெற்றார் என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.20

ஒப்பம் /பச்சமுத்து

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.